KEMENTERIAN SUMBER MANUSIA

PERKESO

**www.perkeso.gov.my**

**1-300-22-8000**

- PERKESO Official
- @perkeso official
- @PERKESOofficial
- PERKESO

ஸ்கேன் செய்து பங்களிக்கவும்

KEMENTERIAN SUMBER MANUSIA

PERKESO

# சுயதொழில் சமூகப் பாதுகாப்புத் திட்டம் (SKSPS)



# சுயதொழில் சமூகப் பாதுகாப்புத் திட்டம்

சுயதொழிலில் ஈடுபடும் தரப்பினரின் பாதுகாப்பை உறுதி செய்ய, 2017 சுயதொழில் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் (சட்டம் 789) கீழ் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுய தொழில் பேரிடர் என்பது, சுய தொழில் காப்புறுதி பெற்றுள்ள ஒருவருக்கு, தொழில் சார்ந்த பயணத்தின்போது ஏற்படும் விபத்து மற்றும் சுய தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது தொழிலின் நிமித்தம் உண்டாகும் காயம் அல்லது நோய்களைக் குறிப்பிடுகிறது.

வேலை சார்ந்த நோய் என்பது 1969 தொழிலாளர் சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் 5-ஆவது பட்டியலில் இடம்பெற்றுள்ள எந்தவொரு தொழிலைச் செய்யும்போது அல்லது தொழிலினால் ஏற்படும் நோய்களாகும்.

இந்தத் திட்டம் பின்வரும் 20 முறைசாரா துறைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| *பயணிகளுக்கான போக்குவரத்து | இணைய வணிகம் |
| *பொருள் மற்றும் உணவு போக்குவரத்து | உடல்நலப் பராமரிப்பு & சிகிச்சை |
| *வியாபாரத் துறை | தகவல் தொழில்நுட்பம் |
| விவசாயம் | தரவு முறைமை |
| கால்நடை | நிபுணத்துவ சேவை |
| வனவியல் | ஆதரவுத் துறை |
| மீன்வளம் | கலை |
| தயாரிப்புத் துறை | முகவர்கள் |
| கட்டுமானம் | வீட்டுச் சேவை |
| உணவு துறை/அங்காடி | தங்குமிட சேவை |

***கட்டாயப்படுத்தப்பட்ட துறைகள்**

சுய தொழில் செய்பவர்கள் சுய தொழில் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கியத் துறையின் கீழ் பதிவு செய்யத் தவறினாலோ மற்றும் பங்களிக்க தவறினாலோ குறைந்த பட்சம் 10,000 மலேசிய ரிங்கிட் அபராதம் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்





## தகுதி

1. வயது வரம்பை உட்படுத்தாத மலேசிய குடியுரிமை/நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்
2. வாழ்வாதாரத்துக்காக சுய தொழில் செய்பவர்கள்.

## தேவையான ஆவணங்கள்

1. அடையாள அட்டையின் நகல்
2. உரிமத்தின் நகல்/பி.எஸ்.வி அட்டையின் நகல்/இ-ஹெய்லிங் விவரம்/ பெர்மிட்/ துறையைப் பொருத்து தொடர்புடைய சங்கங்கள் அல்லது நிறுவனத்தின் உறுதிக் கடிதங்கள்.

## பங்களிப்பு கட்டண/ சந்தா அட்டவணை

காப்புறுதிக்கு உரிய வருமானத்தின் அடிப்படையில் பங்களிப்பு கட்டணம்/சந்தா நிர்ணயிக்கப்படுகிறது:

| திட்டம் | மாதாந்திர வருமானத்தின் அடிப்படையில் காப்புறுதி நிர்ணயிக்கப்படுகிறது | மாதாந்திர முறையில் பங்களிப்பை/ சந்தாவைச் செலுத்தலாம் | வருடாந்திர முறையில் பங்களிப்பை/ சந்தாவைச் செலுத்தலாம் |
|---|---|---|---|
| 1 | RM1,050 | RM13.10 | RM157.20 |
| 2 | RM1,550 | RM19.40 | RM232.80 |
| 3 | RM2,950 | RM36.90 | RM442.80 |
| 4 | RM3,950 | RM49.40 | RM592.80 |

### பங்களிப்பு கட்டணம் செலுத்துதல் சந்தா செலுத்துதல்

பங்களிப்பை/சந்தாவை மாதாந்திர அல்லது வருடாந்திர முறையில் இதன் மூலம் செலுத்தலாம்.

- ☑ **https//matrix.perkeso.gov.my** என்ற அகப்பக்கத்தில் பங்களிப்பை/சந்தாவைச் செலுத்தலாம்
- ☑ பெர்கேசோ ப்ரிஹாத்தின் செயலி
- ☑ அங்கீகரிக்கப்பட்ட பெர்கேசோ முகவர்கள் **(https://www.perkeso.gov.my/ejen-kesela-matan-sosial-pekerjaan-sendiri.html)**
- ☑ ரொக்கமாகச் செலுத்த விரும்பினால், அதனை அனைத்து பெர்கேசோ அலுவலகங்களில் செலுத்தலாம்.

இந்தத் திட்டத்தில் பங்கேற்கும் சுய தொழில் செய்யும் நபருக்கான காப்புறுதி, கட்டணம் செலுத்தப்பட்டு (தேதி மற்றும் நேரம்) அதற்கான இரசீதில் அங்கீகாரம் இடப்பட்டதும் தொடங்குகிறது.

## வழங்கப்படும் நன்மைகள்

| | |
|---|---|
| மருத்துவச் சலுகை | சுயதொழிலில் ஈடுபட்டுள்ள காப்புறுதி பெற்றவர்கள், மருத்துவத்துக்குச் செலவிட்ட தொகையைப் பெர்கேசோவிடம் திரும்பக் கோரலாம். இந்த விண்ணப்பம் பெர்கேசோவின் நிபந்தனைகளுக்கும் கட்டணங்கள் சட்டம் 1951-க்கும் உட்பட்டது. |
| தற்காலிகச் செயலிழப்புச் சலுகை | சுயதொழிலில் ஈடுபட்டுள்ள காப்புறுதி பெற்றவர்கள், மருத்துவர்களின் அங்கீகாரத்துடன், விபத்து ஏற்பட்ட நாள் உட்பட நான்கு நாட்களுக்குக் குறையாமல் மருத்துவ விடுப்பில் இருக்கும் வரை தற்காலிகச் செயலிழப்புத் தொகை வழங்கப்படும். |
| நிரந்தரச் செயலிழப்புச் சலுகை | சுயதொழிலினால் ஏற்பட்ட நிரந்தரச் செயலிழப்புக்கு ஆளான சுயதொழில் காப்புறுதி பெற்றவர்கள் இந்தச் சலுகைக்கு விண்ணப்பிக்கலாம். நிரந்தரச் செயலிழப்புச் சலுகைக்கான தொகையானது, தேர்வு செய்யப்பட்டவரின் மாத வருமானத்தில் 90% ஆகும். |
| சார்ந்திருப்போர் சலுகைக்கான கணக்கீடு | சுயதொழில் காப்புறுதி பெற்றவர்கள், வேலை காரணமாக இடருக்கு ஆளாகி உயிரிழந்தால், அவரைச் சார்ந்திருக்கும் தரப்பினர் மாதாந்திர செலவுப்படிக்குத் தகுதி பெறுவர். தகுதி பெறும் சார்ந்திருப்போர்:-<br>• கணவரை அல்லது மனைவியை இழந்தவர் மற்றும் 21 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள்; அல்லது<br>• பெற்றோர்;<br>• 21 வயதுக்கு உட்பட்ட உடன்பிறப்புகள்; அல்லது<br>• தாத்தா பாட்டி |
| நிலையான உதவியாளர் செலவுப்படி | • சுயதொழில் காப்புறுதி பெற்றவர்கள், வேலையின்போது ஏற்பட்ட காயம் காரணமாக தொடர்ச்சியாக அடுத்தவரின் பராமரிப்பு தேவைப்படும் அளவுக்கு நிரந்தர செயலிழப்புக்கு இலக்கானால் இந்தச் செலவுப்படி வழங்கப்படும்.<br>• மாதத்திற்கு ரிங்கிட் மலேசியா 500 வழங்கப்படும். |
| இறுதிச்சடங்கு சலுகை | சுயதொழில் காப்புறுதி பெற்றவர் பணியின் போது அல்லது செயலிழப்புக்கான உதவித் தொகையைப் பெற்றுக் கொண்டிருக்கும் காலத்தில் உயிரிழந்தால், அவரைச் சார்ந்திருக்கும் தகுதியுடையவருக்கு இறுதிச்சடங்குக்காக ரிங்கிட் மலேசியா 3,000 வழங்கப்படும். |
| உடல்சார் மீட்சி அல்லது தொழிற்கல்வி வசதி | • உடல்சார் மீட்சிக்கான வசதி அல்லது தொழிற்கல்வி இலவசமாக வழங்கப்படுகிறது.<br>• இயன்முறை மருத்துவம் (Fisioterapi) போன்ற உடல் மீட்புப் பயிற்சி, மறுசீரமைப்பு அறுவை சிகிச்சை, செயற்கை உறுப்புகள், சக்கர நாற்காலி, சிறப்பு மெத்தை, கைத்தடி, படுக்கை அறை கழிவுக் கலம் நாற்காலி (கோமோட் நாற்காலி), அணையாடை (டைபர்) மற்றும் பல இவற்றில் அடங்கும்.<br>• மின் தொழில் பயிற்சி, தையல், வானொலி பழுது பார்த்தல் மற்றும் பல தொழிற்கல்விப் பயிற்சிகள் இவற்றில் அடங்கும். |
| கல்விச் சலுகை | சுயதொழில் காப்புறுதி பெற்றவர்கள் பணியின்போது அல்லது நிரந்தரச் செயலிழப்புக்கான உதவித் தொகையைப் பெற்றுக்கொண்டிருக்கும் காலத்தில் உயிரிழந்தால் அவரைச் சார்ந்திருக்கும் பிள்ளைகளுக்கு இக்கல்விக் கடனுதவி வழங்கப்படும். |

## பங்களிப்பை/சந்தா செலுத்தும் கணக்கீட்டு அட்டவணை

| பங்களிப்பு /சந்தா / கிடைக்கபெறும் சலுகை | திட்டம் 1<br>RM13.10 மாதம் / RM157.20 ஓராண்டு | திட்டம் 2<br>RM19.40 மாதம் / RM232.80 ஓராண்டு | திட்டம் 3<br>RM33.90 மாதம் / RM442.80 ஓராண்டு | திட்டம் 4<br>RM49.40 மாதம் / RM592.80 ஓராண்டு |
|---|---|---|---|---|
| மருத்துவச் சலுகை | RM30 / நாள் | RM41.33 / நாள் | RM78.67 / நாள் | RM105.33 / நாள் |
| நிரந்தரச் செயலிழப்புச் சலுகை<br>கணக்கிடப்படும் முறை (எடுத்துக்காட்டு: இழப்பீட்டுக்கான மதிப்பீடு 20%, மற்றும் 22 வயதுக்கு உட்பட்ட சுய தொழில் காப்புறுதி பெற்றவர்) | ஒரே முறை இழப்பீடு கொடுப்பனவு தொகை: RM32,243.40 | ஒரே முறை இழப்பீடு கொடுப்பனவு தொகை: RM47,597.40 | ஒரே முறை இழப்பீடு:- கொடுப்பனவு தொகை: RM90,588.60 | ஒரே முறை இழப்பீடு:- கொடுப்பனவு தொகை: RM121,296.60 |
| நிரந்தரச் செயலிழப்புச் சலுகை கணக்கிடப்படும் முறை<br>(எடுத்துக்காட்டு: இழப்பீட்டுக்கான மதிப்பீடு 100%, மற்றும் 22 வயதுக்கு உட்பட்ட சுய தொழில் காப்புறுதி பெற்றவர்) | ஒரே முறை இழப்பீடு கொடுப்பனவு தொகை: RM32,243.40 & மாத ஓய்வூதியம்: RM756.00 / மாதம் | ஒரே முறை இழப்பீடு கொடுப்பனவு தொகை: RM47,597.40 & மாத ஓய்வூதியம்: RM1,116.00 / மாதம் | ஒரே முறை இழப்பீடு:- கொடுப்பனவு தொகை: RM90,588.60 & மாத ஓய்வூதியம்: RM2,124.00 / மாதம் | ஒரே முறை இழப்பீடு:- கொடுப்பனவு தொகை: RM121,296.60 & மாத ஓய்வூதியம்: RM2,844.00 / மாதம் |
| சார்ந்திருப்போர் சலுகைக்கான கணக்கீடு<br>எடுத்துக்காட்டு: சுயதொழில் காப்புறுதி பெற்றவர், கணவனை அல்லது மனைவியை இழந்தவர் மற்றும் 21 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் | RM945 / மாதம் | RM1,395 / மாதம் | RM2,655 / மாதம் | RM3,555 / மாதம் |
| இறுதிச்சடங்கு சலுகை | RM3,000 | RM3,000 | RM3,000 | RM3,000 |
| நிலையான உதவியாளர் செலவுப்படி | RM500 / மாதம் | RM500 / மாதம் | RM500 / மாதம் | RM500 / மாதம் |